


முஹம்மது ஜமால் காலிஃபா என்கிற அபூ பாராவை, இன்னார் என்று எப்போது சி.ஐ.ஏ., அடையாளம் கண்டதோ, அந்தக் கணத்தில்தான் அமெரிக்காவின் முழுக் கவனமும் அல் காயிதாவின் மீது விழுந்தது. விஷயத்தை உடனே வெளியே சொல்லாமல் கொஞ்சம் மூடிவைத்து, மேற்படி பிரகஸ்பதியின் ஜாதகத்தைத் துப்புரவாக எடுத்துவைத்துக்கொண்டு ஆராய்ந்தார்கள். பிராந்தியத்தில் வள்ளல் என்றும் நிறைய பொதுக்காரியங்கள் செய்பவர் என்றும்கூட, அவர் பிரசித்தி பெற்றிருந்தார். வள்ளல்பெருமான் யாருக்கெல்லாம் உதவியிருக்கிறார் என்று ஒவ்வொரு பட்சியாகத் தேடிப்போனபோதுதான், அத்தனைபேரும் ஏதோ ஒரு வகையில் அல் காயிதாவுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்கிற உண்மை தெரியவந்தது.

பெரிய பிசினஸ்மேன். கௌரவமான விசிட்டிங் கார்டு. ஊரில் யாரைக் கேட்டாலும், சின்ன கவுண்டர் ரேஞ்சுக்குத்தான் துதிப்பாமாலைகள் வந்து விழும். ஆனால், இன்னொரு பக்கத்தில் இப்படி ஒரு ப்ரொஃபைல்!

அமெரிக்கா விழித்துக்கொண்டது. ஆபத்து அருகே கூட இல்லை; உள்ளேயே வந்துவிட்டது என்பது தெரிந்ததும், அமெரிக்க உளவு ஏஜென்சிகள் உட்காரும் இடத்தில் தீப்பிடித்துக்கொண்டது போல எழுந்து சுறுசுறுப்பாகிவிட்டன. உடனடியாக தேசம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. அபூ பாராவுடன் தொடர்புள்ள அமெரிக்க முஸ்லிம்கள் யார் யார் இருக்கக் கூடும் என்று, ஏரியாவாரியாக சர்வே எடுக்க ஆரம்பித்தார்கள். அந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பங்குபெற்ற ஆசாமிகள் யார் யார், எத்தனை பேர் அமெரிக்காவிலேயே இருக்கிறார்கள், எத்தனை பேர் எங்கெங்கே பறந்திருப்பார்கள் என்று கணக்குப்போட்டுத் தேடத் தொடங்கினார்கள்.

முன்னதாக, அதுவரை கைதாகியிருந்த முஹம்மது சலாமி, நிதால் ஹயாத், மம்மூத் அபூஹாலிமா, முகமது அஜாஸ் ஆகிய நான்குபேரையும் சட்டுப்புட்டென்று எஃப்.ஐ.ஆர் போட்டு நீதி மன்றத்தில் நிறுத்தி, கையோடு ஆயுள் தண்டனை வாங்கிக்கொடுத்து உள்ளே கொண்டு தள்ளிவிட்டார்கள். ஈராக்குக்குத் தப்பிப்போன அப்துல் ரெஹ்மான் யாசினைப் பிடிக்கவும் ஆள் அனுப்பிவிட்டு, 'மூத்த தலை'யான ரம்ஸி யூசுஃபைத் தேட ஆரம்பித்தார்கள்.

சவூதி அரேபியா, குவைத், பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு தேசங்களில், அப்போது பணியில் இருந்த சி.ஐ.ஏ. ஏஜெண்டுகளுக்கு ராத்திரி, பகல் என்று எதுவும் கிடையாது. வேறு உத்தியோகம் மண்ணாங்கட்டியும் கிடையாது. எவனோ ஒருத்தன், அமெரிக்காவில் அக்கிரமம் பண்ணிவிட்டுத் தப்பி வந்திருக்கிறான். எங்கு வந்திருக்கிறான், அவன் கறுப்பா, சிவப்பா என்று கூடச் சரியாகத் தெரியாது. சந்தேக கேஸ் எது கண்ணில் பட்டாலும் கோழியை அமுக்கிவிடு. இதுதான் உத்தரவு.

இது உண்மை. அமெரிக்காவுக்கு அந்த ஃப்ளாட்டுக்குப் போய்த் தேடிப்பார்க்கிற வரையில், அப்படி ஓர் ஆசாமி அமெரிக்காவுக்குள் இருந்திருக்கிறான் என்பதே தெரியாது. அதே மாதிரிதான் அபூ பாரா குறித்தும் அதற்குமுன் தெரியாமலேயே இருந்திருக்கிறார்கள். உளவுத்துறையில் அப்படி என்னதான் செய்துகொண்டிருக்கிறார்கள்?

என்றால், அல் காயிதா அதுவரை அமெரிக்கா பொருட்படுத்தத் தகுந்த ஓர் இயக்கமாக இல்லை என்பதுதான் உண்மை.

ஆனால், மேற்படி சம்பவத்துக்குப் பிறகு, சிலிர்த்துக்கொண்டு எழுந்த அமெரிக்க உளவுத்துறை, 'பிசினஸ்மேன்' முஹம்மது ஜமால் காலிஃபா, தொழில்நிமித்தம் அமெரிக்காவுக்கு வந்த சமயம் (டிசம்பர் 14, 1994), லபக்கென்று அமுக்கிப் பிடித்தார்கள். பிடித்தார்களே தவிர, நேரடித் தொடர்பு சாட்சியங்கள் ஏதுமில்லாத காரணத்தால், அவர்களால் சிறையில் அடைக்க முடியவில்லை. குடியேற்றத் துறையின் மூலம் அவரை ஜோர்டனுக்கு நாடு கடத்தத்தான் முடிந்தது.

இந்தமாதிரி ஒரு கிரிமினல், அமெரிக்காவிலிருந்து நாடுகடத்தப்படுகிறார் என்பது தெரிந்தால், ஜோர்டன் அரசு மாலை போட்டா வரவேற்கும்? இறங்கிய இடத்திலேயே கைது செய்து அழைத்துப் போய்விட்டார்கள்.

அப்புறம் என்ன நடந்தது, யார் என்ன செய்தார்கள்/ கொடுத்தார்கள் / பேசினார்கள் என்பதெல்லாம் யாருக்கும் தெரியாது. ஜோர்டன் நீதிமன்றம் அவரை ஒன்றுமறியாத பாப்பா என்று சொல்லி விடுதலை செய்துவிட்டது. அவரும் சமர்த்தாக சவூதி அரேபியாவுக்குப் போய் பாதுகாப்பாகிவிட்டார்.

இதெல்லாம் நடந்த காலகட்டத்தில்தான், நமது ப்ரூக்ளின் தாத்தா ஷேக் உமர் அப்துர் ரெஹ்மான் எஃப்.பி.ஐயிடம் சிக்கினார். உண்மையில், 1993 குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ரம்ஸி யூசூஃபுக்கு இருந்த அதே அளவு பங்கு, அவருக்கும் உண்டு. அவர் போய் குண்டுக்குத் திரி கிள்ளிப் பற்றவைக்கவில்லையே தவிர, பின்னணியில் இருந்து கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கிய நபர் அவர். அதுவும், அல் காயிதா தலைமையின் நேரடி உத்தரவின்படி.

ஆனால், அவரை விசாரணைக்கு என்று அழைத்துப் போனபிறகும், எந்த வகையிலும் சம்பவத்துடன் தொடர்பு படுத்தமுடியாமல் வீட்டுக்கு அனுப்பிவிட்ட அமெரிக்க உளவுத்துறையும், காவல் துறையும் இந்த முறை மிக அற்பமான ஒரு விஷயத்தில் அவரை வளைத்துப் பிடித்துவிட்டது.

ஒரு வரைபடம் ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். அமெரிக்காவின் மிக முக்கியமான பல இடங்களில் குண்டுவைக்கலாம் என்று மார்க் பண்ணி எடுத்துவைத்த வரைபடம். கண்டெடுக்கப்பட்ட இடம் ப்ரூக்ளின் ஃபாரூக் மசூதி என்பதால், ஷேக் சாஹேப் மாட்டிக்கொண்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் இயங்கும் கட்டடம். இதனை ஒரு தற்கொலைப் படைப் போராளி, வண்டி ஓட்டிக்கொண்டு போய் குண்டுவெடித்துத் தகர்க்கவேண்டியது. அடுத்தபடியாக, லிங்கன் மற்றும் ஹாலண்ட் சுரங்கப்பாதைகள். அமெரிக்காவின் மிகவும் பிசியான தரையடிப் போக்குவரத்துச் சாலைகள் இவை. ஒன்றுக்கு மேற்பட்ட கார் குண்டுகளின் மூலம் இந்தச் சுரங்கங்களை உடைத்துத் தூளாக்கவேண்டியது. அதற்குப் பிறகு, ஜார்ஜ் வாஷிங்டன் பாலம். மேலும் எஃப்.பி.ஐயின் நியூயார்க் தலைமையகம். இதையெல்லாம் செய்தபிறகு, அல் டி' அமாட்டோ (Al D'amato) என்கிற அமெரிக்க செனட்டர் ஒருத்தரையும், விரைவில் அமெரிக்காவுக்கு வருகை தரவிருந்த எகிப்து அதிபர் ஹோஸினி முபாரக்கையும் கொல்வது.

இப்படிப் படம் வரைந்து பாகம் குறிக்கப்பட்டு, மேற்சொன்ன இரண்டு பின்னிணைப்புப் படுகொலை குறித்தும் விவரிக்கப்பட்டிருந்த அந்த ப்ளூ ப்ரிண்டைப் பார்த்தபோது, உண்மையில்

அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் வெலவெலத்துப் போய்விட்டார்கள். இந்தக் கிழம் பார்ப்பதற்கு இத்தனை சாதுவாக இருக்கிறது, ஆனால், செய்கிற காரியம் எல்லாம் பயங்கரமாக இருக்கிறதே என்று வியந்தபடிதான் அவரைக் கைது செய்தார்கள்.

ஒன்றுகூட நிறைவேறாத மேற்படி சதித்திட்டங்கள் அத்தனையும் அல் காயிதாவினுடையது. ஷேக் சாஹேபைக் கொண்டு, அமெரிக்காவில் இவை அனைத்தையும் ஓராண்டு இடைவெளியில் செய்துமுடிக்கத் திட்டமிட்டிருந்தார்கள். அப்போதுதான் அவர் மாட்டிக்கொண்டார்.

விஷயம் கேள்விப்பட்ட ஹோஸினி முபாரக், கடும் கோபமுடன் அமெரிக்காவைத் தாக்கி ஒரு அறிக்கை விட்டார். "நீங்கள்தானே அவருக்கு அடைக்கலம் கொடுத்தீர்கள். ஆப்கன் யுத்த சமயத்தில், சோவியத்துக்கு எதிரான உங்கள் செயல்களுக்கு அவரும் அவரைப் போன்றவர்களும் உதவினார்கள் என்பதற்காகத்தானே அமெரிக்காவுக்குக் கூப்பிட்டு வைத்துக்கொண்டு கொஞ்சிக் குலாவினீர்கள்? அதற்குரிய பரிசைத்தான், தர நினைத்திருக்கிறார்கள்" என்பது போன்ற அவருடைய பேச்சு, அமெரிக்காவுக்கு மிகவும் தலைகுனிவாகவும் தர்மசங்கடமாகவும் ஆகிவிட்டது.

ஒசாமா பின்லேடனுக்குக் கூட, முதலில் அமெரிக்க ஆதரவு இருந்ததுதான். ஒசாமா என்ன? ஆப்கன் யுத்த சமயத்தில், டீ சப்ளை செய்யும் பையன்களாக இருந்தவர்கள்கூட, ஓர் அமெரிக்கச் சட்டையாவது வைத்திருப்பார்கள். அந்தளவுக்கு சோவியத்தை அவமானப்படுத்தும் வெறி அமெரிக்காவுக்கு இருந்தபடியால், யாருக்கு என்ன செய்கிறோம் என்றே யோசிக்காமல், ஏகப்பட்ட உதவிகள் செய்தார்கள். ஹோஸினி முபாரக் சொன்னது மாதிரி, அது அறுவடை நேரம்!

ஆகவே இன்னும் தீவிரம், மேலும் உக்கிரம் என்று தங்கள் தேடுதல் வேட்டையைத் துரிதப்படுத்தினார்கள். மறுபுறம், பாகிஸ்தானுக்குத் தப்பித்துப் போன ரம்ஸி யூசுஃப் என்ன ஆனான் என்று பார்க்க வேண்டாமா? அது இதெல்லாவற்றைவிட ரொம்ப முக்கியமான விஷயம் ஆயிற்றே.

எப்பேர்ப்பட்ட சதித்திட்டம்! நினைத்த அளவுக்கு வெற்றி பெறவில்லை என்றாலும், அவனும் அல் காயிதாவும் எதிர்பார்த்த அதிர்ச்சி அலை, அமெரிக்காவில் எழுந்தது மறுக்கமுடியாத உண்மை.

அப்படி ஒரு காரியத்தை முடித்த கையோடு கொஞ்சநாள் தலைமறைவாக, ஒதுங்கியிருக்க மாட்டானோ ஒருத்தன்? ம்ஹூம். சிபா ஏ சஹாபா (Sipah e sahaba) என்கிற ஒரு பாகிஸ்தான் தீவிரவாத இயக்கத்தின் வேண்டுகோளின்படி (கவனிக்கவும். இந்தத் தீவிரவாத இயக்கம், பாகிஸ்தானில் பிறந்து வளர்ந்ததுதான். ஆனால், இது காஷ்மீர் பிரச்னையில் இதுவரை தலையிட்டிருப்பதற்கான ஆதாரம் ஏதுமில்லை. பாகிஸ்தானிலேயே ஷியா முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையை அரங்கேற்றுவதுதான் இதன் பிரதான திருப்பணி.), அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் பேனசிர் புட்டோவைக் கொல்வதற்கான பணிகளில் மும்முரமாகிவிட்டான்.

இந்த விஷயம் கேள்விப்பட்டபோதே, அல் காயிதா தலைமை கவலைப்பட்டது. மாட்டிக்கொண்டுவிடுவான் என்று உறுதியாக அவர்கள் நினைத்தார்கள். ஏனென்றால், ரம்ஸி யூசுஃப் நேரடி அல் காயிதா உறுப்பினர் இல்லை. அந்த ஒரு காரியத்தை அல் காயிதாவுக்காகச் செய்து கொடுத்தான். அதேமாதிரி, இப்போது இன்னொரு காரியம். இன்னொரு இயக்கத்துக்காக! அவனைப் பொறுத்தவரை எதையாவது, யாரையாவது அழித்துக்கொண்டே இருக்கவேண்டும். யார் அசைன்மெண்ட் கொடுத்தாலும் ஓகே.

ஆனால், அல் காயிதாவின் கவலை வேறு. ஏதோ ஒரு காரணத்துக்காக, வேறு ஏதோ ஓரிடத்தில் இந்தமாதிரி ஓர் ஆசாமி கைது செய்யப்படுவானேயானால், உடனடியாக அமெரிக்கா அவனைத் தன் நாட்டுக்கு அனுப்பச் சொல்லிக் கேட்கும். பொதுவாக, அமெரிக்கா கேட்டு யாரும் மாட்டேன் என்று சொல்லமாட்டார்கள். அங்கே போனால், அவசியம் 1993 குண்டுவெடிப்பு பற்றிச்

சொற்பொழிவாற்றாமல் இருக்கமுடியாது. ஏற்கெனவே, குருட்டு ஷேக் வரைக்கும் அகப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், சிக்கல் பெரிதாகுமே தவிர, இன்னொன்றை எதிர்பார்க்க முடியாது.

ஆகவே, எப்பாடு பட்டாவது ரம்ஸி யூசுஃபை இந்த பேனசிர் கொலைத் திட்டத்திலிருந்து கழற்றிவிடமுடியுமா? என்று பார்க்க ஆரம்பித்தார்கள். ஆனால், அதற்குள் விஷயம் கைமீறிவிட்டது.

அப்துல் ஹக்கீம் முராத் என்கிற இன்னொரு சக தீவிரனுடன் ரம்ஸி யூசுஃப், பேனசிரை அவரது வீட்டு வாசலிலேயே டைம் பாம் வெடித்துத் தீர்த்துக்கட்டப் போய், குண்டையும் வைத்துவிட்டு ஒதுங்கி நின்று கவனிக்க ஆரம்பித்தபோது, போலீஸாரால் சந்தேகத்தின்பேரில் சுற்றிவளைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். யூசுஃபுக்கு இரண்டு வழிகள்தாம் இருந்தன. ஒன்று, வைத்த குண்டை எடுத்துக்கொண்டு ஓடிவிடுவது. அல்லது எடுக்காமல் ஓடிவிடுவது.

இந்த இரண்டு முடிவுகளில் எது ஒன்றையும் செய்யாமல், வைத்த குண்டைச் செயலிழக்கச் செய்துவிட்டு ஓடிவிடலாம் என்று அவன் ஏன் நினைத்தான் என்று தெரியவில்லை.

அவசரமாக அதற்கான ஒரு முயற்சியை அவன் மேற்கொண்டபோது, பதற்றத்தில் கை பிசகி குண்டு வெடித்துவிட்டது. தப்பித்தது யார் செய்த புண்ணியமோ. பலத்த காயத்துடன், அந்தக் களேபர சூழலைப் பயன்படுத்திக்கொண்டு எப்படியோ தப்பித்து ஓடிவிட்டான்.

பட்ட காயம் ஆறுகிற வரைதான் பொறுத்திருந்திருப்பான் போலிருக்கிறது. உடனே புறப்பட்டுவிட்டான். இந்த முறை அவனது இலக்கு, பாங்காக். அங்குள்ள இஸ்ரேல் தூதரகத்தை காலி பண்ணிவிட்டு வேறு ஒரு முக்கியமான, அதிபயங்கரமான காரியத்தைச் செய்து சரித்திரத்தில் எப்படியும் இடம் பிடித்துவிடலாம் என்று முடிவு செய்துகொண்டு பாங்காக்குக்கு விமானம் ஏறினான்.

அல் காயிதா மீண்டும் கவலைப்பட ஆரம்பித்தது